# செல்லக்குட்டி




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
அ
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

# துள்ளிக் குதிக்குதுக் கன்னுக்குட்டி



துரத்தி ஓடுது நாய்க்குட்டி



# தத்தித் தாவுது முயல்க்குட்டி



# துதிக்கை ஆட்டுது யானைக்குட்டி



# ஆட்டம் போடுது ஆட்டுக்குட்டி



அசஞ்சு வருது பன்னிக்குட்டி



பதுங்கிப் பாயுது புலிக்குட்டி



பால் குடிக்குது பூனைக்குட்டி



எட்டிப் பாக்குது எங்கக்குட்டி



தவழ்ந்து வருது தங்கக்குட்டி



சேட்ட பண்ணுது சுட்டிக்குட்டி



தூங்கச் செல்லுது செல்லக்குட்டி



குட்டிப் பாப்பா சொல்கிறாள்

குட்டிகள் எத்தனைன்னு சொல்கிறாள்

ஆடி அசையும் குட்டி உண்டு

துள்ளித் தாவும் குட்டி உண்டு

பதுங்கி பால் குடிக்கும் குட்டி உண்டு

குட்டிப் பாப்பா நீ பாடு

குதுகலமாய் நீ ஆடு



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

**உலகத்தமிழ்க் கல்விக்கழகம்**

www.worldtamilacademy.com